**வாயில் போட ஒரு கம்மல்**



கம்மல் பாசி மிக எளிதாக வளர்க்கப்படும் உர உயிரி. நெல் வயலில் மிக விரைவாகப் பரவுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் 24 கிலோ தழைச்சத்து வரை (நைட்ரஜனை) நிலை நிறுத்த வல்லது. பச்சைக் கம்பளம் போல படரும் இப்பாசி, களைகளைக் கட்டுப்படுத்துவதால் விளைச்சல் கூடுகிறது. நெல் வயல்களில் நீர் ஆவியாவதைக் குறைத்து தண்ணீரைச் சேமிக்கிறது.அசோலாவில் புரதம், கொழுப்பு, அமினோ அமிலங்கள் உள்ளதால் மாட்டுக்கு, கோழிக்கு, மீனுக்கு, முயலுக்கு உணவாகப் பயன்படுத்தலாம். மண்புழு வளர்ப்பிலும் கம்மல் பாசியைப் பயன்படுத்தலாம்.

மண்புழுவுக்கு மாட்டுச் சாணத்தைக் கொடுப்பதற்கு மாற்றாக சாணத்தை கம்மல் பாசிக்கு உணவாக்கி மண்புழுவுக்கு உணவாகக் கொடுக்கலாம். இதன் மூலம் குறைந்த நாளில் தரமான மண்புழு எரு கிடைக்கிறது. கம்மல் பாசியில் அமைப்பு, அதன் பயன்களைப் பார்க்கும் போது ஷீ மேக்கர் ‘சிறியதே அழகானது’ (Small is beautiful) என்று சொன்னது எவ்வளவு பொருத்தமானது என்பதை உணர முடிகிறது. கம்மல் பாசி வளர்ப்பில் சூப்பர் பாஸ்பேட் பொட்டாஷ் உரங்கள் பயன்படுத்த வேண்டும். இது இயற்கைக்கு சரிப்பட்டு வராதது. பாறைத்தூள், பாறை பாஸ்பேட் பயன்படுத்துவதை வரவேற்கிறோம்.

**தொடர்புக்கு**

கோ. பாலகிருஷ்ணன்
சேவூர் அஞ்சல்
காட்பாடி வட்டம்
வேலூர் மாவட்டம்
தொலைபேசி : 97903-69233, 93444-04186